என்.டி.ஏ.வால் இதுவரை ஒத்திவைக்கப்பட்ட தேர்வுகள் எத்தனை?

தேர்வர்களுக்கான உள்கட்டமைப்பு வசதிகள் என்ன?

மக்களவையில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 28-

என்.டி.ஏ.வால் இதுவரை ஒத்திவைக்கப்பட்ட தேர்வுகள் எத்தனை? தேர்வர்களுக்கான உள்கட்டமைப்பு வசதிகள் என்ன? என்று மக்களவையில் மக்களவை கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய கல்வி அமைச்சர் பதில் அளித்துள்ளார்.

இது பற்றிய விவரம் வருமாறு:-

தேசிய தேர்வு முகமை தொடங்கப்பட்ட திலிருந்து (என்.டி.ஏ.) கடந்த ஏழு ஆண்டுகளில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டு பின் ஒத்தி வைக்கப்பட்ட தேர்வுகள் எத்தனை? ஆண்டு வாரியாக விவரங்கள் தேவை என்றும், தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டதற்கான காரணங்கள் மற்றும் அது ஒத்திவைக்கப்படுவதைத் தடுக்க என்.டி.ஏ. எடுத்த நடவடிக்கைகள் மற்றும் தொலைதூர இடங்களில் ஒதுக்கப்படும் மையங்கள் மற்றும் வெவ்வேறு மையங்களில் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்துவதற்கு போதுமான உள்கட்டமைப்புகள் இல்லாதது குறித்து மாணவர்கள் எழுப்பும் புகார்கள் குறித்து என்.டி.ஏ. அறிந்திருக்கிறதா என்றும்,

அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? மேலும் தேர்வர்களின் புகார்களை, குறைகளை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் என்னென்ன?" என்றும் தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி மற்றும் டாக்டர் இராணி ஸ்ரீகுமார் ஆகியோர் எழுத்துப்பூர்வமாக நாடாளுமன்றத்தில் கேள்விகள் எழுப்பினர்.

இக்கேள்விகளுக்கு ஒன்றிய கல்வித் துறை இணையமைச்சர் டாக்டர். சுகந்த மஜீம்தார் எழுத்துபூர்வமாக அளித்த பதில் வருமாறு:-

"தேசிய தேர்வு முகமை கடந்த 2018-இல் தொடங்கப்பட்டதிலிருந்து 5.4 கோடிக்கும் அதிகமான மாணவர்களை உள்ளடக்கிய 240 தேர்வுகளை வெற்றிகரமாக நடத்தியிருக்கின்றது.

NTA ஆல் நடத்தப்படும் பெரும்பாலான தேர்வுகள் பல்வேறு பாடங்களில், பல்வேறு கால முறைகளில், பல கால இடைவெளிகளில் நடத்தப்பட்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட நிலையில் எதிர்பாராத, இதற்கு முன் நடந்திராத கோவிட் தொற்று போன்ற சூழ்நிலைகள், தொழில் நுட்பக் கோளாறுகள், தளவாட பற்றாக்குறை, நிர்வாக சிக்கல்கள், அரசு ஆணைகள் போன்ற நிலைகளில் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

அதன்படி... 2020, 2021 ஆண்டுகளில் கோவிட் தொற்று ஊரடங்கு காரணமாக JEE, NEET, CSIRUGC NET, ICAR AIEEA, DUET, AIAPGET, JIPMAT ஆகிய தேர்வுகள் ஒத்தி வைக்கப்பட்டன. 2021 CMAT தேர்வு AICTE தேர்வு திட்டத்தை மாற்றியமைத்ததால் ஒத்தி வைக்கப்பட்டது.

மேலும் 2022 இல் இந்திரா காந்தி திறந்த நிலை பல்கலைக்கழக பி.ஹெச்.டி. நுழைவுத் தேர்வு நிர்வாகக் காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டது. 2023 GATB, BET ஆகிய தேர்வுகள் மண்டல தேர்வு மையங்களுடனான ஆலோசனைக்குப் பின் ஒத்தி வைக்கப்பட்டது.

NCET 2024 தேர்வு தொழில் நுட்பக் காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டது.

CSIR NET 2024 தேர்வு தளவாட பிரச்சினைகள் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது.

தற்போது பெரும்பாலான தேர்வுகளுக்கான தேர்வு நாட்காட்டியை முன்னதாகவே என்.டி.ஏ. அறிவிக்கத் தொடங்கியிருக்கிறது. இது தேர்வர்களின் வசதிக்காக செய்யப்படுகிறது. என்டிஏவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகள், மறுஅட்டவணைகள் / ஒத்திவைப்புகளுக்கு இடமளிக்கும் இடைக்கால நாட்களைக் கருத்தில் கொண்டு தேர்வு நாட்காட்டி திட்டமிடப்பட்டுள்ளது.

என்.டி.ஏ. நடத்தும் தேர்வுகளை எழுதுபவர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்களின் முன்னுரிமையை கருத்தில் கொண்டும், ஒவ்வொரு தேர்வு மையத்தில் உள்ள இடங்களின் அளவை கருத்தில் கொண்டும் தேர்வு மையங்கள் கணினி மென்பொருள் மூலமாக ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

பெரும்பாலும் தேர்வு எழுதுபவர்கள் தேர்ந்தெடுத்த நகரத்துக்குள் ஒரு தேர்வு மையம் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சில சமயங்களில் தேர்வு எழுதுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் பட்சத்தில், அவர்களால் தேர்வு செய்யப்பட்ட நகரத்துக்குள் தேர்வு மையம் அளிக்கப்பட முடியாமல் போகலாம்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில், NTA அவர்களை அருகிலுள்ள இடங்களில் தங்க வைக்க முயற்சிக்கிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கு மையங்களை ஒதுக்கும் போது, உள்கட்டமைப்புகள் அவர்கள் பயன்படுத்தும் வகையில் இருப்பதை உறுதி செய்ய உரிய கவனம் செலுத்தப்படுகிறது.

விண்ணப்பதாரர்களின் புகார்கள்/குறைகள் மின்னஞ்சல்கள் மற்றும் ஹெல்ப் டெஸ்க் தொலைபேசி எண்கள் மூலம் பெறப்படுகின்றன. அவை முறையாகத் தீர்த்து வைக்கப்படுக்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார் ஒன்றிய கல்வித் துறை இணை அமைச்சர் டாக்டர். சுகந்த மஜீம்தார்.

ஒன்றிய அரசின் பதிலுரையில் என்.டி.ஏவால் தற்போது நிறுத்திவைக்கப்பட்ட பெரும்பாலான தேர்வுகள் இடம்பெறாமல் இருப்பது அரசு தேர்வு முறைகளில் மேலும் சந்தேகத்தையும் மாணவர்களின் எதிர்காலம் மீது அரசின் அலட்சியப் போக்கையும் சுட்டிக்காட்டுகின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (26.7.2024) தலைமைச் செயலகத்தில், Rubiks Cube விளையாட்டுப் போட்டியில் Asia Records, India Book of Records, Ingenious Charm World Records போன்ற பல்வேறு சாதனைகளை படைத்தமைக்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் விருதுகளை செல்வி எம். லக்ஷிதா காண்பித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது தாய் திருமதி ஏ.மோனிஷா, சகோதரர் செல்வன் ஆனந்த் மற்றும் பயிற்சியாளர் செல்வி பிந்து பிரியங்கா ஆகியோர் உள்ளனர்.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் - தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன

மாணவர்களின் "கலர்ஸ் ஆப் கோலிவுட்" குறும்படம்!

16-வது சர்வதேச ஆவணம் - குறும்படப் போட்டிக்குத் தேர்வு!

சென்னை, ஜூலை 28-

16வது சர்வதேச ஆவணம் மற்றும் குறும்படப் போட்டியில், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களின் "கலர்ஸ் ஆஃப் கோலிவுட் எ மெலனின் டெஃப்ஷியன்சி" (Colours of Kollywood A Melanin Deficiency) என்ற ஆவண குறும்படம் திரையீட்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

16வது சர்வதேச ஆவணம் மற்றும் குறும்படப் போட்டி கேரளாவில் 26 ஜூலை 2024 முதல் 31 ஜூலை 2024 வரை நடைபெற்று வருகிறது. இந்த சர்வதேச ஆவணம் மற்றும் குறும்படப் போட்டியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த திரைக்கலைஞர்கள் இந்திய அளவில் பல்வேறு மாநிலங்களிலிருந்து எண்ணற்ற குறும்படங்கள் போட்டியிட்டனர்.



இதில், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த இளங்கலை காட்சிக் கலை (Bachelor of Visual Arts) மாணவியான செல்வி. பரோசலில் இயக்கிய ஆவண குறும்படம் "கலர்ஸ் ஆஃப் கோலிவுட் எ மெலனின் டெஃப்ஷியன்சி" (Colours of Kollywood A Melanin Deficiency), 22 ஆவண குறும்படங்களில் ஒன்றாக திரையீட்டிற்காக அதிகாரப்பூர்வ பட்டியலில் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்த கலர்ஸ் ஆஃப் கோலிவுட் எ மெலனின் டெஃப்ஷியன்சி ஆவணப் படம் வெள்ளை சருமத்தில் மீதான விருப்பம் இந்தியர்களின் ஆழ்மனதில் பதிந்துள்ளது, தமிழ் சினிமாவும் இதற்கு விதிவிலக்கல்ல. தொழில்நுட்ப வல்லுநர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களுடனான உரையாடல் மூலம் இந்த ஆவணப்படம் இதை ஆய்வு செய்கிறது. குறிப்பாக தமிழ் நடிகைகள் குறித்தும் இந்த ஆவணப்படம் பேசுகிறது.

இந்த ஆவணக்குறும்படத்தில் தேசிய விருது பெற்ற இயக்குநரான க. ஹரிஹரன், விளம்பர திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் புகைப்படக் கலைஞர் நரேஷ் நில், சர்வதேச விருது பெற்ற நடிகை மியா மெல்சர் மக்கள் தொடர்பாளரான செல்வி. கவிதா இம்மானுவேல், ஜே.என்.யு. மாணவியான செல்வி ஹருஷிக்கா, திரைப்பட இயக்குநர் மற்றும் விரிவுரையாளர் மணிஷங்கர் நாராயணன் உள்ளிட்ட பலர் தங்களது கருத்துக்களை பகிர்ந்துள்ளனர்.

இந்த ஆவணக்குறும்படத்தை இந்நிறுவன மாணவர்களான செல்வி பரோசலில் இயக்கியுள்ளார். ஒளிப்பதிவை செல்வன் அக்ஷய் பரூனோன் என்பவரும், ஆடியோகிராப்பியை சுப்பிரமணியபாரதி என்பவரும், படத்தொகுப்பை செல்வன் கோபிகிருஷ்ணன் என்பவரும் எண்மிய இடைநிலை பணிகளை செல்வன் அருண்ராஜ் என்பவரும் உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் பணிகளை செல்வின் தக்ஷின் என்பவரும் கையாண்டுள்ளனர்.

இந்த ஆவணக்குறும்படத்தினை செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் தயாரித்ததாகும்.

ஆஸ்திரேலியாவின் - டாஸ்மானியா ஆராய்ச்சி நிறுவனத்தில் பல்துறை வல்லுநர்களுடன் சந்திப்பு!

மண்வள ஆராய்ச்சிகள் தொடர்பான உயர் தொழில்நுட்பம்:

வேளாண்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் - மண்வளத்துறை சார்ந்த பேராசிரியர்கள் - ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடல்!

சிட்னி, ஜூலை 28-

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அவர்களின் ஆஸ்திரேலியா சுற்றுப்பயணம் மற்றும் கலந்துரையாடல் தொடர்பான செய்திக் குறிப்பு வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப வேளாண்மை-உழவர் நலத்துறையின் சார்பாக மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டுப்பணிகள் தொடர்பான ஆராய்ச்சிகள், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது போன்ற பணிகளுக்காக வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் தலைமையிலான குழு ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அரசுமுறை பயணமாக சென்றுள்ளனர். இக்குழுவில் வேளாண்மை உற்பத்தி ஆணையர்/அரசு முதன்மை செயலர், வேளாண்மை உழவர் நலத்துறை மற்றும் உயர் அதிகாரிகள் உடன் சென்றுள்ளனர்.

இப்பயணத்தின் இரண்டாம் கட்டமாக நேற்று (27.07.2024) ஹோபர்ட் நகரத்தில் உள்ள டாஸ்மானியா வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பல்துறை வல்லுநர்களுடன் கலந்துரையாடல் மற்றும் தொழில்நுட்பங்கள் தொடர்பான கருத்து பரிமாற்றங்கள் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த கலந்துரையாடலின் போது தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட "மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்" என்ற திட்டத்தின் தொடர்ச்சியாக தமிழக விவசாய நிலங்களின் மண் வளத்தை பெருக்கி விவசாயிகள் தரமான உணவு உற்பத்தியை செய்திட தேவையான மண் வள ஆராய்ச்சிகள் தொடர்பான உயர் தொழில்நுட்பங்கள் குறித்து மண்வளத் துறை சார்ந்த பேராசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

மேலும், அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளை தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் உலக வெப்பமயமாதல், பருவமற்ற காலங்களில் மழை பொழிவு, அதி கனமழை பொழிதல், பயிர்களில் அதிக பூச்சித் தாக்குதல், வறட்சி, வெள்ளம் போன்றவற்றிலிருந்து விவசாயிகளைக் காப்பது தொடர்பான முன்னெச்சரிக்கை தொழில் நுட்பங்கள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

மின்னனு வேளாண்மை, உணவு பதப்படுத்துதல் ஆகியவற்றில் டாஸ்மானியா வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் பின்பற்றப்படும் உயர் தொழில் நுட்பங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டன. மேலும், உயர் தொழில்நுட்பங்களை கொண்டு சத்தான பழ வகைகள் மற்றும் காய்கறிகளை விளை விப்பது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

இக்கலந்தாய்வில் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர், செல்வி. அபூர்வா, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழக துணை வேந்தர், பேராசிரியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வேளாண்மை தொழில் நுட்பங்கள் தொடர்பாக அரசு/துறைரீதியாக, மேற்கொள்ளப்பட்ட கருத்துப் பரிமாற்றங்களை முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று தமிழ் நாட்டில் நடைமுறைப் படுத்தப்படும்.

மகாராஷ்டிர மாநிலத்தின் முன்னாள் முதல்வர்

உத்தவ்தாக்கரே பிறந்த நாள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூலை 28-

மகாராஷ்டிர மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் உத்தவ் தாக்கரே பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

மகாராஷ்டிர மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் உத்தவ் தாக்கரே அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!

தங்களது தனிச்சிறப்பான தலைமைத்துவம் 2024 மக்களவைப் பொதுத் தேர்தலில் சிவசேனா (UBT) மற்றும் இந்தியா கூட்டணி மகாராஷ்டிராவில் பல்வேறு சவால்களையும் மீறி வெற்றி பெற்றதில் முக்கியப் பங்காற்றியது.

தாங்கள் தொடர்ந்து வலிமையோடும் வெற்றியோடும் திகழ விழைகிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை மெட்ரோ ரயில் திட்ட இரண்டாம் கட்டப் பணிகளுக்கு

ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்!

மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வலியுறுத்தல்!

நாமக்கல், ஜூலை 28-

மாநிலங்களவை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சென்னை மெட்ரோ ரயில் திட்ட இரண்டாம் கட்டப் பணிகளுக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 2021-22 ஆம் ஆண்டு பட்ஜெட் உரையில், ஒன்றிய அரசின் நிதியமைச்சர், கடந்த ஆகஸ்ட் 17, 2021 அன்று பொது முதலீட்டு வாரியம் மூலம் சென்னை மெட்டோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிக்காக ரூ. 63,246 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ததாக அறிவித்தார். எனினும், இந்த திட்டம் கடந்த மூன்று ஆண்டுகளாக பொருளாதார விவகாரங்களுக்காக அமைச்சரவைக் குழுவின் (CCEA) ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. இந்த தாமதத்தால் தமிழ்நாடு அரசே முழு செலவையும் ஏற்று பணிகளை செயல்படுத்தி வருகிறது.

ஒன்றிய அரசின் தாமதத்தால் மாநிலத்தின் நிதிநிலையை கடுமையாக பாதிக்கிறது. இது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் டோகன் சாஹு அவர்களிடம் நான் ஒரு கேள்வியை எழுப்பினேன், அதற்கு 118.9 கிலோமீட்டர் சென்னை மெட்ரோ ரயில் 2 ஆம் கட்டத் திட்டம் தற்போது செயல்பாட்டில் உள்ளது என்றும், திட்டத்தின் அனுமதி சாத்தியக் கூறுகளைப் பொறுத்தது என்றும் பதில் அளித்துள்ளார்.

சென்னை மெட்ரோ மக்கள் தொகை சுமார் 1.2 கோடி என மிகப் பெரிய அளவில் உள்ளது. இதனால் ஒரு சதுர கி.மீ.க்கு 26,533 பேர் என்ற மக்கள் தொகை அடர்த்தியின் காரணமாக சென்னை நகரில் போக்குவரத்து பரபரப்பாக உளளது. மெட்ரோ நெட்வொர்க்குகள் உள்ள டெல்லி மற்றும் பெங்களூரு போன்ற பெரிய மக்கள் தொகை கொண்ட மற்ற நகரங்களை ஒப்பிடுகையில், சென்னை மக்கள் பெருநகரங்களுக்கு இணையாக நாள்தோறும் சுமார் 25 கி.மீ தூரம் பயணித்து வருகின்றனர்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை மெட்டோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிக்காக மீண்டும் நிதியுதவி வழங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில், சென்னை மெட்ரோ ரயில் 2 ஆம் கட்ட திட்டத்திற்கு மத்திய அரசு முன்பு அறிவிக்கப்பட்ட நிதியை ஒதுக்க வேண்டும். ஒன்றிய அரசு அனைத்து மாநிலங்களையும் ஒரு தாய் போல சமமாக நடத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

சிவகங்கையில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

மு.தென்னவன் தலைமை! அப்துல்லா எம்.பி. தமிழரசி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சிவகங்கை, ஜூலை 28-

தமிழக முதல்வர் தளபதி அவர்கள் ஆணையின்படி ஒன்றிய பா.ஜ.க. அரசுநிதி நிலை அறிக்கையில் தமிழகத்தை வஞ்சித்ததை கண்டித்து மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் 27ம்தேதி நடத்தப்படும் என்று அறிவித்தார். அதன்படி சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் சிவகங்கை சண்முக ராஜா கலையரங்கில் முன்னாள் அமைச்சரும், மாநில இலக்கிய அணி புரவலருமான மு. தென்னவன் தலைமையில் கழக அயலக அணி செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி. முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கை மாறன் வரவேற்றுப் பேசினார் . இந்த ஆர்ப்பாட்டத்தில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல் .ஏ. எழுத்தாளர் திருமதி ஆண்டாள் பிரியதர்ஷினி ஆகியோர் கண்டன உரை ஆற்றினார்கள். தொடர்ந்து ஒன்றிய அரசை கண்டித்து கண்டண முழக்கங்கள் எழுப்பப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர். அ. கணேசன், மாவட்ட கழக துணை செயலாளர் கே. எஸ். எம். மணிமுத்து, முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் காரைக்குடி நகர் மன்றத் தலைவர் எஸ். முத்துதுரை, நகர் கழகச் செயலாளர்கள் சி.எம். துரை. ஆனந்த்,பெரி. பாலா, க.பொன்னுச் சாமி, என்.குணசேகரன், பொதுக் குழு உறுப்பினர்கள் பி.ஆர். பெருமாள், தெய்வானை இளமாறன், ஆதி.கண்ணாத்தாள், த.உதயகுமார், ஒன்றிய கழக செயலாளர் கள் எம்ஜெயராமன், திருமலை முத்துராமலிங் கம், துரை. ராஜாமணி எம்.அண்ணாத். துரை, ஆறு. செல்வராஜன், வே.ஆரோக்கியசாமி , யோக. கிருஷ்ணகுமார், நாகனிரவி, பூபால சிங்கம், லெ.மு.ரவிச்சந் திரன், எஸ். சண்முக வடிவேல், விராமதி மாணிக்கம், பி.செல்வராஜ், பூமணி, கே. பாலசுப்பிரமணியன், கே. ஆர். ஆனந்த், நா.நெடுஞ் செழியன், குன்னக்குடி சுப்பிரமணியன், சு ப . சி ன் ன து ரை , ஏம்.ஏ.கடம்பசாமி பேரூர் கழக செயலாளர்கள் கதிர் வேல், ஜெயராமன், நாகூர் கனி, நஜுமுதீன், அசோக், ஆர்.கார்த்தி கேயன் ,பகுருதீன் அலிபாய், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் துணை அமைப்பாளர்கள் கார்த்தி, எஸ்.எம்.மதிவாணன், கே.பொற்கோ, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், மகளீரணி நிர்வாகிகள் திலகவதி கண்ணன், பாக்கியலட்சுமி விஜயகுமார், கலா காசிநாதன், செல்வராணிஅய்யப்பன், மஞ்சுளா ,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் அ.வல்லபாய், நகர் மன்ற துணைத்தலை வர்கள் எம்.கார் கண்ணன் ,பாலா சுந்தர், மானாமதுரை ஒன்றிய குழு தலைவர் கள் திருமதி லதாஅண்ணாத்துரை, மஞ்சுளாபாலசந்தர்,துணை தலைவர் முத்துச்சாமி, மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் பாஸ்கரன், ஆனந்தகுமார், மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, அமைப்பாளர் சிங்கமுத்து, மாவட்ட சிறுபான்மை நல அமைப்பாளர் என்.எம்.சாக்ளா,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், மாவட்ட இலக்கிய அணி குரு.போஸ், குமணன், ஊராட்சி மன்றத் தலைவர் கே.பி.மந்தக் காளை,ஒன்றிய , நகர, பேரூர் கழக நிர்வாகிகள் வீனஸ் ராமநாதன், சக்கரவர்த்தி ,ஜெயகாந்தன், அறு .சரவணன், அயுப் கான், ஷாஜகான், கணேசன், அன்புச்செல்வன் சேவியர், பொறியாளர் மைக்கேல், மும்பை ஜேசுராஜ், பா.காளிமுத்து, வே.கருணாகரன், அண்ணாமலை, கவுன்சிலர் கோவிந்தன், சோமசுந்தரம், சேகர், புதூர்கண்ணன், வசந்த், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் சிங்காரம், மதார் மூர்த்தி, திருநாவுக்கரசு, முன்னாள் ஒன்றியகுழு தலைவர் என். மணி, மாவட்ட இலக்கிய அணி போஸ், மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என்.ரவி, தொ.மு.ச. முருகேசன், தக வல் தொழில் நுட்ப அணி சுரேஸ், கண்ணன், தொண்டரணி புலிக்குட்டி, பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலா ராணி நாராயணன், ஓட்டுனர் ரமேஷ், உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். சுட்டெரிக்கும் வெயிலை பொருட்படுத்தாமல் கூடியிருந்தவர்கள் கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.